# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விகாரி, ஆனி 25, திருவள்ளுவர் ஆண்டு–2050

## 2019 ஜூலை 10, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது."*

தேவைப்படும் நேரத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதானாலும், அதன் பயனை நினைத்துப் பார்த்தால் அது உலகத்தைவிட மிகப் பெரியதாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**71—**

### விளையாட்டு விடுதி

***21009—திரு. V.T. கலைச்செல்வன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் விளையாட்டு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரத்தில் விளையாட்டு வீரர்களுக்காக தங்கும் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

**திரு. V.T. கலைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லாய் இருந்த என்னை சிலையாய் வடித்த என் சிந்தை கலந்த தாய்; மண்ணிலும் விண்ணிலும் ஆட்சி செய்யும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடிகளை முதற்கண் போற்றி வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற இளைஞர்களுக்கும், நகர்ப்புறத்தில் உள்ளவர்களுக்கு இணையான விளையாட்டு கட்டமைப்பு வசதி வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு, 12,524 ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் 64 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படும் என்று விதி 110—ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டு, தமிழக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் தலைவிதியை, இதய தெய்வம் பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாற்றிக் காட்டிய, தமிழகத்தின் எளிமையின் வடிவமாக, ஆற்றலின் இருப்பிடமாக, அன்பின் வடிவமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் OPS அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி வளர்ந்து வருகின்ற தொகுதியாகும். அங்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சமூகத்தில் நலிந்த நிலையிலுள்ள சிறுபான்மையின சமூக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உள்ளனர். அங்குள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மிகச் சிறப்பாக கால்பந்து விளையாடுகிறார்கள். அதற்குச் சான்றாக தமிழகத்தில்*

*2019 ஜூலை 10]*

*உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களால் நடத்தப்பெறும் கால்பந்து போட்டிகளில் அவர்கள் விளையாடி வருகிறார்கள். மேலும், அவர்களை ஊக்கப்படுத்திட, அவர்களுடைய எதிர்காலம் சிறந்திட, "கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் பரமனைப் போல" இத்தொகுதியின் கிராமப்புற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் நலன் கருதி, விருத்தாசலத்தில் கால்பந்து சிறப்பு* academy*–ஐ அமைத்துத் தர அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி தொடர்பாக எனது விடையை அளிக்கிறேன். கடலூரிலும், நெய்வேலியிலும் விளையாட்டு வீரர்களுக்காக விடுதிகள் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருத்தாசலத்திலே விளையாட்டு விடுதி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏனென்றால், அதன் சுற்றுப்புறங்களிலே உள்ள கிராமங்களில் நிறைய கால்பந்து விளையாட்டு வீரர்கள் இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி வந்தவுடனேயே,* NLC *நிறுவனத்தின்* CSR fund *மூலமாக அந்த விடுதியைக் கட்டித் தருவதற்காக நேற்றையதினம் அந்த நிறுவனத்தினரை நான் தொடர்பு கொண்டேன். அதற்கான உதவிகளை அவர்கள் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன் அவர்கள்.*

**திரு. V.T. கலைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட தொழவலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, போ. பவழங்குடி அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர், அரசு மேல்நிலைப் பள்ளி, வேப்பூர் தாலுகாவிலுள்ள ஒருசில பள்ளிகளில் மாணவர்கள் அமர்ந்து பயில்வதற்கு கட்டடங்கள்*

மிகக் குறைவான அளவிலே இருக்கின்றன. இந்த ஆண்டு நபார்டு திட்டத்தின் மூலமாகவோ அல்லது சிறப்பு நிதி ஒதுக்கியோ, அந்த மாணவர்களின் நலன் கருதி, அந்தப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நபார்டு திட்டத்தின் மூலமாகவும், S.S.A. திட்டத்தின் மூலமாகவும் பல்வேறு பணிகளைத் தமிழகத்திலே இன்றைக்கு நிறைவேற்றி வருகிறார்கள். தொடர்ந்து ஆண்டுதோறும் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள் கூடுதலாக இருக்கின்றார்கள் என்பதைக் கண்டறிந்து அந்தப் பள்ளிகளிலெல்லாம் நபார்டு திட்டத்தின் மூலமாகப் புதிய கட்டடங்கள் பொலிவோடு கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல; அந்தப் பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் சமையலறைகள் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டு காலமாக இங்கேயிருக்கிற பல சட்டமன்ற உறுப்பினர்கள் பல இடங்களில் உள்ள பள்ளிகளில் சுற்றுச் சுவர் இல்லை; கழிப்பறை வசதிகள் இல்லையென்று பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வருகிறார்கள். அப்படி இருந்து வருகிற நிலையை மாற்றிட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அனைத்தையும் ஒருங்கிணைத்து, அந்தப் பள்ளிகளில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பள்ளிகளை இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே எடுத்துக் கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கின்ற கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்று சொன்னாலும்கூட. . .

*2019 ஜூலை 10*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சம்பந்தமில்லாமல் கேட்காதீர்கள்.*

**திரு. பி. முருகன்:** *கல்வித் துறை தொடர்புடையதுதான். வேப்பனஹள்ளி. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியையொட்டி கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள். இல்லையென்றால், வேண்டாம்; உட்காருங்கள்.*

*வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**72—**

**மின்சாரம் வழங்குதல்**

***13038—திரு. சபா. ராசேந்திரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், விசூரில் மின் விநியோகப் பாதையை மாற்றி, மருங்கூர் துணை மின் நிலையத்தின் மூலமாக மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற மின் பாதையை மாற்றி, மருங்கூர் துணை மின் நிலையத்தின் வழியாக மின்சாரத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அது* reserve forest*–ல் 3 கிலோ மீட்டர் கடந்து வரவேண்டியுள்ள காரணத்தினால், அந்த வழியாகக் கொண்டு வர முடியாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நியாயமான கோரிக்கை. திருநாவலூரிலிருந்து 7.5 கிலோ மீட்டர் தூரத்தில் விசூர்* line *வருகின்றது. எனவே, அதோடு இணைத்து, உயர் மின்னழுத்த கம்பி அமைத்து, மின் பளு இல்லாமல் ஒரு மாத காலத்திற்குள் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*